(வலைபின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நவோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(1999, ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*1999, யூன் மாதம் 25 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II*** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 6.50* *தபாற் செலவு : ரூபா 3.50*

**1999 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நவோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.–ஓ.23/97

## நவோதய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"நவோதய மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தின் எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்தாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனு மதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நவோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நவோதய மன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களாக அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்கள் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "நவோதய மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும், அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். நவோதய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

H - 022545

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) அடிநிலை வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான சமூக, கல்வி மற்றும் பண்பாட்டு அபிவிருத்தியைப் போஷித்தல், அத்துடன் மேம்படுத்தல் ;

(ஆ) சிறுவர் கல்வி, பாலர் பாடசாலைகள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல், அத்துடன் அவற்றை மேம்படுத்துதல் ;

(இ) மக்களின் உளவளர்ச்சி, உடல் வளர்ச்சி கருதி விளையாட்டுத்துறை நடவடிக்கைகளை மேம் படுத்தலும், விளையாட்டு முகாம்களை ஒழுங்கு செய்தலும் ;

(ஈ) வேலைவாய்ப்புகளை மற்றும் சுயதொழில்வாய்ப்பு களை ஏற்படுத்துதலும் அத்துடன் ஏழை மக்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டங்களைத் திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்துதலும் ;

(உ) சூழலைப் பாதுகாத்தல் ;

(ஊ) இளைஞர்கள் மனநம்பிக்கை, தலைமைத்துவப்பண்பு என்பவற்றை வளர்த்துக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் ;

(எ) இளைஞர்களுக்கான கற்கைநெறிகளை நடாத்துதல் ;

(ஏ) பண்பாட்டு முக்கியத்துவத்தை மேம்படுத்துதல் கருதிக் கண்காட்சிகளை நடாத்துதலும் அத்துடன், விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகள மற்றும் உல்லாசப் பிரயாணங்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும்;

(ஐ) தாய், சேய் நலனோம்பு சேவைகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும், மகப்பேற்றுக்கு முன்பும், பின்புமான கவனிப்பு, போசணை மற்றும் வைத்திய வசதிகளை வழங்குதல் ;

(ஒ) சுகாதார நிலையங்கள், நடமாடும் சிகிச்சை நிலையங்கள் மற்றும் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தலும் நடாத்துதலும் ;

(ஓ) சிரமதான, சௌக்கியதானத் திட்டங்களை ஒழுங்கு செய்தல்;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள் களையுடையதும் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எதேனும் வேறு நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதுடன் அவற்றுடன் கருத்துக்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பரிமாறிக்கொள்ளுதலும் ;

(க) நூல்நிலையங்களைத் தாபித்தலும், பேணி வருதலும், நூல்கள், சஞ்சிகைகள், நினைவேடுகள், பருவகால வெளியீடுகள் போன்றவற்றுக்கு ஒப்பப்பணம் வழங்குதலும், அத்துடன் அவற்றை மக்களுக்கு வழங்குதலும்;அத்துடன்

(ச) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அல்லது விரும்பத் தக்கவையான வேறு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்தல், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணங்களைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், நன்கொடை களையும், மானியங்களையும் பெறுதல், சேகரித்தல், அதன் நிதியங்களை முதலீடு செய்தல், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கு மான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அதன் விதிகளுக்கு அமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வாறாகவும், அவற்றுக்கிணங்கவும் தெரிவுசெய்யப்படும் பதவிதாங்குநர்களையும், அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் நிறைவேற்றுக்குழுவே, கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பொரும்பான்மை கொண்டு, பின்வரும் விடயங்களுக்காக, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாத விதிகளை ஆக்குவது, சுட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை வகுப்பாக்கம் செய்தல் அல்லது வெளியேற்றுதல்;

(ஆ) பதவிதாங்குநர்களை, நிறைவேற்றுக்குழுவைத்தெரிவு செய்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர் களின் கடமைகளை நடாத்துதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும், நிறைவேற்றுக் குழுவினதும் கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் அத்துடன் முகாமை செய்தல், அதன் நிதியைக் கட்டுக்காவலில் வைத்திருத்தல் அத்துடன் அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(உ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறை வேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவது போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவில் இருக்கின்ற மன்றத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவில்லாமல் உள்ள அளவுக்கு, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டுத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், மன்றத்திற்குச் செலுத்தப் படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபன த்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருக்கவும் இயலுமானதாகவும் ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை ஈடுவைக்க, விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க, பாரபந்தப்படுத்த அல்லது பொறுப்புக்குள்ளாக்க உள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது, அத்துடன் அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டு மென்பதுடன் அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோரு பவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமை களையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெடிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பனம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.